# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
# Ang Mo Kio Tamil Methodist Church

***18 பிப்ரவரி 2024 ஞா யிறு ஆராதனை***
18 February 2024 - Sunday Service

| | |
|---|---|
| ✝ ***ஆராதனைக்கு அழைப்பு*** Call to Worship | ***திரு. கோவிந்தராஜு*** Mr.Govindaraju |
| ***இறைவணக்கப்பாடல்*** Introit | ***பாடகர் குழு*** Choir |
| ***ஜெபம்*** Prayer | ***திரு. கோவிந்தராஜு*** Mr.Govindaraju |
| ✝ ***தொடக்க பாடல்*** Opening Song | ***சபையார் இணைந்து*** Congregation |

## அலங்கார வாசலாலே

1. அலங்கார வாசலாலே
கோவிலுக்குள் போகிறேன்@
தெய்வவீட்டின் நன்மையாலே
ஆத்துமத்தில் பூரிப்பேன்@
இங்கே தெய்வ சமுகம்,
மெய் வெளிச்சம், பாக்கியம்.

2. கர்த்தரே, உம்மண்டை வந்த
என்னண்டைக்கு வாருமேன்.
நீர் இறங்கும்போதனந்த
இன்பத்தால் மகிழுவேன்.
என்னுட இதயமும்
தெய்வ ஸ்தலமாகவும்.

3. பயத்தில் உம்மண்டை சேர,
என் ஜெபம் புகழ்ச்சியும்
நல்ல பலியாக ஏற
உமதாவியைக் கொடும்.
தேகம் ஆவி யாவையும்
சுத்தமாக்கியருளும்.

4. நல்ல நிலத்தில் விழுந்த
விதை பயிராகுமே;
நானும் அவ்வாறே மிகுந்த
கனிகளைத் தரவே,
வசனத்தைக் காக்க நீர்
ஈவளிக்கக் கடவீர்.

| | |
|---|---|
| ✝ ***மாறி வாசித்தல் 7ம் ஞாயிறு தேவ ஆராதனை புத்தகம்*** பக்கம் *24* "சங்கீதம் 23" | ***சபையார் இணைந்து*** Congregation |

"கர்த்தர் என் மேய்பராயிருக்கிறார"

Psalter Reading –Page 24 "Psalm 23"

| | |
|---|---|
| ***தந்தை போற்றி*** Gloria Patri | ***சபையார் இணைந்து*** Congregation |
| ***துதி ஆராதனை*** Singspiration | |
| ***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்*** Thanksgiving & Pastoral Prayer | ***மறைதிரு. விஜய் ஜோஸப்*** Rev. Vijay Joseph |
| ***பரமண்டல ஜெபம்*** Lord's Prayer | ***சபையார் இணைந்து*** Congregation |
| ***காணிக்கை பாடல்*** Offertory Song | ***சபையார் இணைந்து*** Congregation |

## மான்கள் நீரோடை வாஞ்சித்து

*மான்கள் நீரோடை வாஞ்சித்து*
*கதறும் போல் என் தேவனே*
*எந்தன் ஆத்துமா உம்மையே*
*வாஞ்சித்து கதறுமே*

*தஞ்சமே நீர், அடைக்கலம் நீர்*
*கோட்டையும் நீர் என்றும் காப்பீர்*

1. தேவன் மேல் ஆத்துமமே
தாகமாயிருக்கிறது
தேவனின் சந்நிதியில் நின்றிட
ஆத்துமா வாஞ்சிக்குதே

2. ஆத்துமா கலங்குவதேன்
நேசரை நினைத்திடுவாய்
அவரின் இரட்சிப்பினால் தினமும்
துதித்துப் போற்றிடுவாய்

3. யோர்தான் தேசத்திலும்
எர்மோன் மலைகளிலும்
சிறு மலைகளிலிருந்தும்
உம்மை
நிதமும் நினைத்திடுவேன்

4. தேவரீர் பகற்காலத்தில்
கிருபையை தருகின்றீர்
இரவினில் பாடும் பாட்டு எந்தன்
வாயினிலிருக்கிறது

5. கன்மலையான தேவன்
நீர் என்னை ஏன் மறந்தீர்
எதிரிகளால் ஒடுங்கி அடியேன்
துக்கத்தால் திரிவதேனோ

6. ஆத்துமா கலங்குவதேன்
தேவனில் காத்திருப்பாய்
அவரே என் இரட்சிப்பு தினமும்
அவரை துதித்திடுவாய்

| | |
|---|---|
| ✝ ***பூலோகத்தாரே யாவரும்*** Doxology | ***சபையார் இணைந்து*** Congregation |

✝ **திருமறைப் பாடம்**
**யோவான் 6 : 35 - 40**
Scripture Reading :
John 6 : 35 - 40

**திரு. பெஹின்**
Mr. Behin

**அருளுரை**
Sermon

**மறைதிரு. விஜய் ஜோஸப்**
Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்**
Offertory & Closing Song

**சபையார் இணைந்து**
Congregation

**<u>உம்மைப்போல் யாருண்டு எந்தன் இயேசு நாதா</u>**

**உம்மைப்போல் யாருண்டு எந்தன் இயேசு நாதா**
**இந்தப்பார் தலத்தில் உம்மைப்போல் யாருண்டு**

**பாவப்பிடியினில் சிக்கி நான் உழன்றேன்**
**தேவா தம் அன்பினால் மன்னித்தீர்**

1. உலகம் மாமிசம் பிசாசுக்கடியில்
அடிமையாகவே பாவி நான் ஜீவித்தேன்
நிம்மதி இழந்தேன் தூய்மையை மறந்தேன்
மனம் போல் நடந்தேன் ஏமாற்றம் அடைந்தேன்
என்னையா தேடினீர் ஐயா இயேசு நாதா
உம்மை மறந்த ஓர் துரோகி நான்
என்னையா தேடினீர் ஐயா இயேசு நாதா
அடிமை உமக்கே இனி நான்

2. இன்றைக்கு நான் செய்யும் இந்த தீர்மானத்தை
என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்
நொறுக்கும் உருக்கும் உடையும் வளையும்
உமக்கே உகந்த தூய சரீரமாய்
ஐம்பொறிகளையும் உமக்குள் அடக்கும்
இயேசுவே ஆவியால் நிரப்பும்
வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய் திகழ
அக்கினி என் உள்ளம் இறக்கும்

3. வீட்டிலும், ஊரிலும் செல்லுமிடமெங்கும்
சோதனை வந்திடில் கர்த்தா நீர் காத்திடும்
மேசியா வருகை வரையில் பலரை
சிலுவைக் கருகில் அழைக்க ஏவிடும்
முழங்காலில் நிற்க. வேதத்தை அறிய
தினந்தோறும் தேவா உணர்த்தும்
உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்
என்றுமே வராமல் காத்திடும்

**அறிவிப்புகள்**
Announcements

✝ மனப்பாட வசனங்கள்
Weekly Memory Verses
John 6 : 35
**யோவான் 6 : 35**

**சபையார் இணைந்து**
Congregation

35. **இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே**
**என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்**
**என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும்**
**தாகமடையான்.**

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

**மறைதிரு. விஜய் ஜோஸப்**
Rev. Vijay Joseph

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ **சபையார் நிற்கவும்** ⁄ Indicates Congregation standing